**<u>வெள்ளகோவில் நகராட்சி</u>**

**<u>ந.க.எண். 819 / 2017 / எச்1, நாள். 13.08.2019</u>**

**<u>நகர்மன்றத் தீர்மானம் எண். 204 / 2019 நாள். 09.08.2019</u>**

**<u>பிளாஸ்டிக் கழிவு துணை விதிகள் 2016</u>**

**<u>உள்ளாட்சித்துறை அறிவிக்கை</u>**

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986 (சட்ட எண்.29/1986)-ல் பிரிவு 3,6 மற்றும் 25-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306-ன்படி 2019-ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12-ன் கீழ் பிளாஸ்டிக் மொத்த விற்பனை, உற்பத்தி செய்தல், சேமித்து வைத்தல், விற்பனை, எடுத்துச் செல்லுதல், நெகிழி பயன்படுத்துதல் முதலியன தடை செய்யப்பட்டு அபராத தொகை விதிக்கப்பட்டுள்ளதை கீழ்க்கண்டவாறு உப விதிகள் ஏற்படுத்தலாம்.

| | | | |
|---|---|---|---|
| 1 | (i) | **செயலாக்க அதிகாரி:** நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவர். | |
| | (ii) | **ஆய்வு நடத்தும் அதிகாரி:** ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவு பணிமேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர். | |
| | (iii) | **மேல்முறையீட்டு அலுவலர்:** இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார். | |
| | (iv) | **தண்டனைகள் விதிக்கும் முறைகள்:** சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள ஷரத்துக்களை மீறுபவர்களுக்கு உடனடி ஸ்தல அபராதம், குடிநீர் இணைப்பு துண்டித்தல், பொருள்களை பறிமுதல் செய்தல் அச்சம் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கான உரிமம் ரத்து செய்தல் (D&O) முதலியன தண்டனை முறைகள் | |
| 2 | | **வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு :**<br>1. மொத்த சேமிப்பாளர் / விநியோகிப்பாளர் | |
| | | a) | 1 ச.அடி முதல் 500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம் |
| | | b) | 501 ச.அடி முதல் 1000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம் |
| | | c) | 1001 ச.அடி முதல் 1500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம் |
| | | d) | 1501 ச.அடி முதல் 2000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம் |
| | | e) | 2000-ம் அதற்கு மேல். |
| 3. | **<u>வணிக வளாகங்கள்:</u>** | | |
| | a) | பெரிய மற்றும சிறிய துணிக்கடைகள், | |
| | b) | பல்பொருள் அங்காடிகள் பெரியது, | |
| | c) | திரையரங்குகள், | |
| | d) | அரசு மதுபானக்கடை, மதுபான விற்பனைக் கூடங்கள் (BARS)<br>மனமகிழ்மன்றம் முதலான இதர இனங்கள், | |
| | e) | கல்வி நிறுவன வளாகங்கள், | |
| | f) | அரசு, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் வளாகங்கள், | |
| | g) | திருமண மண்டபங்கள், தங்கும் விடுதிகள் முதலானவை, | |
| | h) | பெரிய, நடுத்தர மற்றும் சிறிய தொழிற்சாலைகள், | |
| 4. | மளிகைக் கடைகள், காய்கறிக்கடைகள், பழக்கடைகள், மருந்துக்கடைகள், பழச்சாறு விற்பனைக் கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் முதலானவைகள், | | |
| 5. | சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோர கடைகாரர்கள் மற்றும் இதர வணிகம் செய்பவர்கள் | | |

| | |
|---|---|
| 6 | **இந்த துணை விதியை மீறினால் செலுத்தும் அபராதம்**<br>இந்த துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கு பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கை காலம் 30 நாட்கள் ஆகும். அதற்கும் பிறகு இந்த துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணைப்படி இந்த துணை விதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவார். |
| 7 | துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசு படுத்துவர் அட்டவணை II-ல் குறிப்பிட்டபடி அபராத தொகை கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில் அவருக்கு எதிராக கடையை / நிறுவனத்தை அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் / மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 / பொது சுகாதார சட்டம் 1939 ன்படி வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும். |
| 8 | **மேல் முறையீட்டுக்கு உரிமை**<br>வெள்ளகோவில் நகராட்சியின் இந்த துணை விதிகளில் பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்ய உரிமையுள்ளவர்கள் ஆவர். இந்த துணை விதிகள் பல்லடம் நகர் மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வந்துள்ளன |

## II தண்டனை விபரம்

பிரிவு 306 (28-a) இன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்

| வ. எண் | குற்றங்கள் | முதன்முறையான குற்றத்திற்க்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்க்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்க்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| 1 | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி எறியப்பட்ட நெகிழியை சேமித்தல்,வழங்குதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ. 5000 /– (ஐந்தாயிரம் ரூபாய்) | ரூ. 10000 /– (பத்தாயிரம் ரூபாய) | ரூ. 25000 /– (இருபத்தைந்தாயிரம் ரூபாய்) |
| 2 | வணிக வளாகங்கள் துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ. 2000 /– (இரண்டாயிரம் ரூபாய்) | ரூ. 5000 /– (ஐந்தாயிரம் ரூபாய்) | ரூ. 25000 /– (இருபத்தைந்தாயிரம் ரூபாய்) |
| 3 | மளிக்கைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் | ரூ. 1000 /– (ஓராயிரம் ரூபாய்) | ரூ. 2000 /– (இரண்டாயிரம் ரூபாய்) | ரூ. 5000 /– (ஐந்தாயிரம் ரூபாய்) |
| 4 | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ. 500 /– (ஐநூறு ரூபாய்) | ரூ. 1000 /– (ஓராயிரம் ரூபாய) | ரூ. 2000 /– இரண்டாயிரம் ரூபாய் |

**ஆணையாளர்**
**வெள்ளகோவில் நகராட்சி**